பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எல்லி

மலர்: 20] சென்னை: ஆடி 21 (5—8—72) சனி வெளியூர்: ஆடி 22 (6 8—72) ஞாயிறு [இதழ்: 45

## கவலைப்படும் நிலை இல்லை

★

சென்னை, ஆக. 5—

தமிழ்நாட்டில் வறட்சி நிலைமை இருப்பதாக மாநில அரசுக்குத் தகவல் எதுவும் இல்லை; என்றாலும், துயர நிலைமைகள் உள்ள இடங்களில் நிலத் தீர்வைகளையும் --கடன் பாக்கிகளையும் வசூல் செய்வதை ஒத்திவைக்குமாறு மாவட்டக் கலெக்டர்களுக்குக் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நிலவரம் பற்றி அரசு உன்னிப்பாகக் கவனித்துவருகிறது.

# மதுரை மாவட்ட மாநாடு துவக்கம்

## மதுரை படைத்த புதிய வரலாறு

### பாண்டியன் தலைநகரில் கழகத் தலைவர்கள் திருவுலா

### இட்சோபலட்சம் பேர் பங்கேற்ற பேரணி

மதுரை, ஆக. 5—

"இந்தியத் துணைக்கண்டத்து வரலாற்றிலேயே இதுவரையில் கண்டிராத மாபெரும் ஊர்வலத்தை, மதுரை மாநகர் நேற்று நடத்திக் காட்டியிருக்கிறது.

மதுரையில் ஆண்டுதோறும் நடைபெறும் சித்திரைத் திருவிழாவையும் மிஞ்சும் அளவுக்கு இலட்சோலட்சம் பேரடங்கிய 8 மைல் நீள ஊர்வலம், ஓர் இடத்தைக் கடக்க ஐந்து மணி நேரம் ஆகியிருக்கிறது.

மாலை 5-மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் 8 மைல் தொலைவைக் கடந்து மாநாட்டுப் பந்தலை அடைவதற்குள் நள்ளிரவாகிவிட்டது; ஊர்வலத்தின் முகப்பு மாநாட்டுப் பந்தலுக்குள் நுழையும்போது ஊர்வலத்தின் வால் பகுதி புறப்பட்ட இடத்திலேயே இருந்தது.

'இவ்வளவு பெரிய ஊர்வலத்தை இதுவரையில் இந்தியாவில் உள்ள எந்த அரசியல் கட்சியும் நடத்தியதில்லை' என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

'தமிழக வரலாற்றில் மிகப் பெரிய ஊர்வலம்' என்று மதிப்பிடப்பட்டவை -- 1967 ல் விருகம்பாக்கத்தில் நடந்த கழக மாநாட்டு ஊர்வலமும், அடுத்து 1971-ல் சென்னையில் நடந்த தி. மு. க. தேர்தல் சிறப்பு மாநாட்டு ஊர்வலமும்தான்; ஆனால், மதுரை மாநாட்டு ஊர்வலம் அவற்றையெல்லாம் மிஞ்சிவிட்டது!

வரலாற்றுச் சிறப்புமிக்க பிரம்மாண்டமான மதுரை மாநாட்டு ஊர்வலச் சிறப்பை கீழவாசல் அருகே அமைக்கப்பட்டிருந்த பந்தலில் நீண்ட நேரம் நின்றபடியே கண்டு மகிழ்ந்த கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், உளம் பூரித்துப் பின்வருமாறு கூறினார்:--

**"எழுச்சி -- உணர்ச்சி -- மகிழ்ச்சி மூன்றும் கலந்த ஊர்வலம்! இந்தியாவிலேயே நடைபெற்ற கட்சி ஊர்வலங்களில் இதுதான் பெரிய ஊர்வலம்!**

**"ஆர்வம் காட்டிய கழகக் கண்மணிகளையும், ஆதரவு காட்டிய பொது மக்களையும் வாழ்த்துகிறேன் -- வணங்குகிறேன்."**

கலைஞரின் மதிப்பீடு, வெறும் கற்பனைக் கணிப்பு அல்ல -- அலங்கார வருணனையல்ல; வார்த்தைக்கு வார்த்தை அத்தனையும் நூற்றுக்கு நூறும் உண்மை! இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காணாத கண்ணென்ன கண்ணே என்றுதான் கூற வேண்டும்.

மதுரை மாவட்ட தி.மு.க. ஐந்தாவது மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஊர்வலம் நேற்று மாலை வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து புறப்பட்டு — இராமநாதபுரம் சாலை, முனிச்சாலை, கீழ வெளி வீதி, தெற்கு மாசி வீதி, வடக்கு மாடவீதி, யானைக்கல், பெரியபாளையம், கோரிப்பாளையம் வழியாக மாநாட்டுப் பந்தலை இரவு 12 மணியளவில் அடைந்தது.

கழகத் தலைவர் கலைஞரின் செல்வன் மு.க. முத்து ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கி--திறந்த ஜீப் வண்டியில் நின்றபடி வந்தார்.

அழகு ஊர்தியில்--கழகத் தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் நாவலர் மற்றும் அமைச்சர்கள், மாநாட்டுத் தலைவர் முரசொலி மாறன் எம்.பி., திறப்பாளர் எல். கணேசன், அண்ணா படத் திறப்பாளர் பி.கே. மூக்கையா தேவர் எம்.பி., வரவேற்புக் குழுத் தலைவர் மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. மற்றும் கழக முன்னணித் தோழர்கள் அமர்ந்துவந்தனர்.

முதலமைச்சர் கலைஞரும்--பொதுச்செயலாளர் நாவலரும், கீழவாசலில் அமைக்கப்பட்டிருந்த உயரமான மேடைப் பந்தலில் நின்றுகொண்டு ஊர்வலத்தைப் பார்த்தனர்; பிறகு இருவரும் அலங்கார ஊர்தியில் அமர்ந்து ஊர்வலத்தில் வந்தனர்.

'பாண்டிய மன்னனின் வேழப் படையோ' என்று வியக்கும் வகையில் ஊர்வலத்தின் முன்னே 16 யானைகள் வந்தனர்; அடுத்து இரண்டு ஒட்டகங்களும் வந்தன; 12 குதிரைகள் மீது கழகக் கொடி ஏந்திய தொண்டர்கள் அமர்ந்து வந்தனர்; இருபது பேர் கொம்பு ஊதிக்கொண்டு வந்தனர்.

அடுத்து, நூற்றுக்கணக்கான மாட்டு வண்டிகள் — அவற்றில் அண்ணா, கலைஞர் படங்கள்—கட்டுச்சோறு மூட்டைகளுடன் கிராமப்புறத்துத் தாய்மார்கள் குழந்தைகளுடன் அமர்ந்துவந்த காட்சி, கழகத்தின்பால் கிராமங்களில் உள்ள அடித்தளத்து மக்கள் அசைக்க முடியாத பாசம் வைத்திருப்பதை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

மாட்டின் கொம்புகளில் கருப்பு--சிவப்பு வண்ணம்—கழுத்தில் கருப்பு-சிவப்புத் துண்டுடன் வண்டியை ஓட்டிவந்தார்கள்.

கால்நடையாக வந்த தொண்டர்கள், கருப்பு--சிவப்பு மனியனும், வெள்ளைக் கால்சட்டையும் அணிந்து இலட்சியமுழக்கத்துடன் அணிவகுத்து நடைபோட்டனர்.

ஊர்வலத்தில் வந்த மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், கார்கள், லாரிகள், பஸ்கள்—இவைகளின் எண்ணத் தொலையாததாக இருந்தது.

மயிலாட்டம், ஒயிலாட்டம், சிலம்ப ஆட்டம், கரக ஆட்டம், குறவன்-குறத்தி நடனம், உருமி மேளம், நையாண்டி மேளம், உடுக்கை, பம்பை, தாரை-தப்பட்டை, பாண்டு, நாதசுரம் உள்ளிட்ட கிராமியக் கலைகள் அத்தனையும் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தன.

கழக இலட்சியத்தையும் -- கழக அரசின் சாதனைகளையும் விளக்கும் காட்சிகள் அமைந்த டிரக்கு வண்டிகள் எண்ணிறந்தன.

ஊர்வலத்தில், சீருடையணிந்த கழகத் தொண்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் -- மாணவர்கள் -- ஆந்திர, கருநாடக, கேரள மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த கமகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தைக் காண நேற்றுப் பகல் 12 மணிக்கு மக்கள் ஊர்வலம் வரும் வழிநெடுகிலும் கூடத்துவங்கி விட்டனர்.

ஊர்வலம் முடிய இரவு 12 மணி ஆகிவிட்டது.

ஊர்வலம் வந்த வழி நெடுகிலும் 300-க்கு மேற்பட்ட அலங்கார வாயில்கள் -- வரவேற்பு வளைவுகள் -- கொடி தோரணங்கள் -- ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டு நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடைந்ததும், அங்கு வாயில் முகப்பிலே உயர்ந்த கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றிவைத்தார் -- மாநாட்டுத் தலைவர் முரசொலி மாறன்.

இத்துடன் மாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சி முடிந்தது.

## இலட்சோபலட்சம் மக்கள் திரண்டனர்

### முத்து வரவேற்க--எல். கணேசன் துவக்கிவைக்க -- முரசொலி மாறன் தலைமை ஏற்றார்

மதுரை, ஆக. 5—

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக ஐந்தாவது மாநாடு, இன்று காலை 10-மணிக்கு அண்ணா நகரில் (பந்தயத் திடல்) தொடங்கியது.

வி. எஸ். எஸ். மணி பந்தலில்—நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அரங்கில், மதுரை சேதுராமன் – பொன்னுசாமி குழுவினரின் நாதசுர இன்னிசையுடன்நிகழ்ச்சிகள் தொடங்கின.

நாதசுர இசைக்குப் பின், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

ஒரத்தநாடு தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும், தி. மா. மு. க. மாநில அமைப்பாளருமான திரு. எல். கணேசன், மாநாட்டைத் துவக்கிவைத்து உரையாற்றினார்.

அடுத்து அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. பி. கே. மூக்கையாத் தேவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து உரை நிகழ்த்தினார்.

அடுத்து வ. கு. தலைவர் முத்து அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை யேற்குமாறு முரசொலி மாறன் அவர்களைக் கேட்டுக்கொண்டு முன்மொழிய -- தோழர்கள் பலர் வழிமொழிந்து பேசியபின், முரசொலி மாறன் தலைமையேற்றுத் தலைமையுரையாற்றினார்.

இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மாநாட்டில் பந்தல் நிரம்பி வழியும் அளவுக்கு இலட்சோபலட்சம் மக்கள் -- தாய்மார்கள், குழந்தைகள் உட்படத் திரண்டிருக்கின்றனர்.

## 1,500 கைதிகள் விடுதலை அடைவர்

### மற்றும் பல கைதிகளுக்கும் தண்டனைக் குறைப்பு

### விடுதலை வெள்ளி விழாச் சலுகை -- தமிழக அரசு முடிவு

மதுரை, ஆக. 5—

'மூன்று மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் (அவர்கள் எந்த அளவுக்கு அந்தத் தண்டனையை அனுபவித்திருந்தாலும்) விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு ஆகஸ்டு 15-ம் நாள் விடுதலை செய்வது எனது தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது; மூன்று மாதம்வரை தண்டனை பெற்றவர்கள், தற்போது தமிழ்நாட்டுச் சிறைகளில் 1 500 பேர் உள்ளனர்; இந்த 1 500 பேரும் விடுதலை செய்யப்படுவர்"

என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இங்கு செய்தியாளரிடம் தெரிவித்தார்; இதன் தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:— "சுதந்தர நாள் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கான தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றப்படும் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?"

பதில்:—"மத்திய அரசிடமிருந்து வந்திருக்கின்ற யோசனையில்,

(4-ம் பக்கம் பார்க்க)

# சனநாயகவாதிதானு காமராசர்?

[★]

## போராட மக்களைத் தூண்டும் மர்மம் என்ன?

### ஓட்டுமுறையில் அமைந்த ஆட்சியை வேட்டுமுறையில் கவிழ்க்க இயலாது

### 'வீட்டு'க்கு அனுப்பப்பட்டவரை இனி மக்கள் 'கோட்டை'க்கு அனுப்பப்போவதில்லை

சனநாயக முறையில் அமைந்து -- அசைக்க முடியாத வலிமையுடன் திகழும், திராவிட முன்னேற்றக் கழக அரசை, 'அசைத்துப் பார்க்க லாம்' என்று யார் யாரோ -- என்னென்ன வெல்லாமோ செய்து பார்த்துவிட்டார்கள்; இப்மியளவுகூட அசைக்க முடியவில்லை; அவர்கள் அதற்காகச் செய்யும் ஒவ்வொரு காரியமும், கழக அர சுக்கு மேலும் வலிவைத்தான் தேடித் தருகிறது!

இதைக் கண்டு அவர்களுக்குப் பொறுக்க முடியவில்லை; தங்கள் மன எரிச்சலை எப்படி வெளியிட்டுக் கொள்வது என்றுகூடப் புரிய வில்லை; பிதற்றுகிறார்கள்; புலம்புகிறார்கள்; இன்றைக்கு ஒன்று சொல்கிறார்கள் -- நாளைக்கு ஒன்று சொல்லுகிறார்கள்; இங் கொன்று சொல்கிறார்கள் -- அங்கொன்று சொல்கிறார்கள்; அவர் களுடைய பேச்சையும் -- செயலையும் கண்டு நமக்கு ஆத்திரம் பிறக்கவில்லை -- சிரிக்கத்தான் தோன்றுகிறது!

'தி.மு.க. ஆட்சி இதோ கவிழப் போகிறது -- அதோ கவிழப் போகிறது' என்று சொல்லி, அதற்கான நாள்கூடக் குறித்துச் சொல்லிப் பார்த்துவிட்டார்கள்; ஒன்றும் நடக்கவில்லை

இன்னமும் அவர்கள் எந்த முகத்தை வைத்துக்கொண்டு மக்கள் மத்தியில் நடமாடுவது! எப்படியோ அரசியல் பிழைப்பு நடத்தி யாக வேண்டுமே! 'நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம்' என்றாலோ, அவர்களுக்குப் பதவி ஆசை என்ற 'சபலம்' வந்து குறுக்கிடுகிறது! எப்படியாவது -- யார் முயற்சியினாலாவது -- தி. மு. க. ஆட்சி அரசு கவிழாதா -- பதவியில் அமரச் 'சான்ஸ்' கிடைக்காதா -- என்று நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரிபவர்கள், எப்படி நாக்கைப் பிடுங்கிக் கொள்வார்கள்?

'ஊழல் -- ஊழல்' என்று ஊளையிட்டுப் பார்த்தார்கள்; 'சட்டம் -- ஒழுங்கு கெட்டுவிட்டது' என்று சத்தம் போட்டுப் பார்த்தார்கள்; மாணவர்களைத் தூண்டிவிட்டார்கள்; பள்ளி ஆசிரியர்களைத் தூண்டிவிட்டார்கள்; தொழிலாளர்களைத் தூண்டிவிட்டார்கள் -- பயனளிக்கவில்லை!

மாநில சுயாட்சிக்குப் 'பிரிவினை வாதம்' என்று வியாக்கியானம் செய்து -- தி. மு. க. மீது பழிசுமத்தப் பார்த்தார்கள்; 'ஜெயப்பிர காஷ் நாராயணனே மாநில சுயாட்சிக்காக மாநாடு கூட்டப் போகிறார்' என்றவுடன், பெட்டிப் பாம்புபோல அடங்கிவிட்டார் கள்!

கடைசியாக, 'விவசாயிகள் கிளர்ச்சி' என்ற பெயரால் நிலப்பிரபுக் கூலைக் கிளப்பிவிட்டுப் பார்த்தார்கள்; அதுவும் பிசுபிசுத்துப் போயிற்று!

இப்போது எதுவும் கிடைக்கவில்லை; அவர்களுடைய 'கூட்டுக் கும் பெனியில்' இருந்த கட்டாரிகளுக்குள் ளேயே தகராறு ஏற்பட்டு 'உன்னுலேதான் நான் டேன்—என்னுலே நீ கெட்டாய்' என்று காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக் கரணம் போடும் நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் சிண்டிகேட் பெருந்தலைவர், தமது எதிர்காலத் திட் டத்தை வெளியிட்டிருக்கிறார்.

"தி.மு.க. அரசுக்குப் பயந்து மக்கள் கோனழசளாக இருந்துவிடக் கூடாது.

"சுதந்தரப் போராட்டத்தின்போது உயிர் விடும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை; இப்போது தி.மு.க. அரசு மாற்றுவதில் கிடைக்கும்போல் தோன்று கிறது; அதில் என் உயிர் போனுல் மட்டற்ற மகிழ்ச்சி அடைவேன்."

இதுதான் காமராசர் கடைசியாக வெளியிட்டுள்ள எதிர்கால வேலைத் திட்டம்; எல்லோருக்குமிச்சிப் பொதுக்கூட்டத்தில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

ஒரு மாதத்துக்கு முன்னுல், எல்லாக் கட்சிகளையும் தி.மு.க. அரசுக்கு எதிராகப் போராட அழைத்தார்! அந்தப் போராட்டத்துக்குத் தாமே தலைமைகின்றத் தயார் என்றும் அறிவித்தார்! எந்தக் கட்சியும் அவர் அழைப்பைச் சட்டை செய்யவில்லை!

கூட்டுப் போராட்டத்துக்குத் தலைமைதாங்கும் பாக்கியம்தான் கிட்ட வில்லை -- தன்னந்தனியாளாக இருக்சேனும் போராட்டம் நடத்தித் 'தியாகியாகலாம் -- என்பது அரசரு அந்திய கால ஆசை போலும்! அரசரு ஆசையில் நாம் குறுக்கிட விரும்பவில்லை!

போராட்டம் எதற்காக? யாரை எதிர்த்துப் போராட்டம்? இந்தப் போராட்டம் இப்போது தேவைதானு?—இவற்றையெல்லாம் மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டாமா?

'தி.மு.க. அரசுக்குப் பயந்து மக்கள் கோழைகளாக இருக்கக் கூடாது' என்று கூறுகிறார்! தி.மு.க. அரசு என்ன -- மக்களுக்கு எதிரான அரசா? மக்கள், என்வர்கள் யார் -- சிண்டிகேட்டின் உறுப்பினர்களாக இருப்பவர்களும் அவர்களுடைய ஆதரவாளர் களும்தான் மக்களா?

தி. மு. கழகத்தை முன்னிலும் கூடுதலான வலிமையுடன் ஆட்சியில் அமர வைத்தார்களே -- அவர்களெல்லாம் மக்கள் அல்லரா?

அப்படித்தான் -- மக்கள் அஞ்சக்கூடிய அளவுக்கு தி.மு.க ஆரசு என்ன செய்து வருகிறது? காமராசருக்கும் -- அவர் திருக்கூட் டத்துக்கும் வேண்டுமானுல், தி.மு.க. அரசு ஏற்பட்டதனுல் ஏதவிச் சுகம் பாதிக்கப்படுகிறதோ; மக்களுக்கு என்ன பாதகம் ஏற்பட்டுவிட்டது?

'மக்கள் சோனழகளாக இருக்கக்கூடாது' என்ருல், என்ன பொருள்? மக்களை அரசுக்கு எதிராக வன்முறை யில் ஈடுபடுப்படி தூண்டுவது அல்லாமல் இதற்கு வேறு என்ன பொருள்?

> 'மக்கள்' என்ற பட்டியலில் உள்ள அவரது கட்சியின ரைத்தான், இப்படித் தூண்டிவிடுகிறார் காமராசர்! உண் மையில் போராட்டங்களில் ஈடுபடும், இந்த அரசு மக்கள் விரோத அரசு' என்ற நீதிபதி சொல்லவில்லை; அவர் கள் யாரும் காமராசர் பேச்சைக்கேட்டுக் கையில் கத்தி யும் -- கட்டாரியும் எந்திப் புறப்பட்டுவிடப் போவ தில்லை!
>
> ரௌடித்தனத்தினுலேயே கட்சியை வளர்த்து -- ரௌடித் தனத்தையே மூலதனமாகக் கொண்டு தன்னைப் பெருந் தலைவராக உயர்த்திக்கொண்ட காமராசரிடம் வேறு எதை நாம் எதிர்பார்க்க முடியும்?
>
> காமராசர் சனநாயகவாதியானுல், இன்னெரு நான்காண்டுக் காலம் பொறுத்துக்கொண்டு அல் லவா இருந்திருக்க வேண்டும்? கழக அரசை மக்கள் கைவிடுவார்களானுல், ஆட்சி, தானே மாறிவிட்டுப் போகிறது? இதற்காக, இப்போது போராட்டம் நடத்தும்படி மக்களை ஏன் தூண்ட வேண்டும்?

இக்க சனநாயக உண்மை அவருக்கும் தெரியும்; சனநாயகத்தின் மீது அவருக்குப் பற்று இருந்தால் அல்லவா மக்கள் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு இருப்பார்?

> ஓட்டு முறையில் நம்பிக்கை வைத்துப் பொறுமை யாக -- சனநாயகப் பண்புடன் -- அறவழியில் போராடிய பேரறிஞர் அண்ணு அவர்களை ஆட்சியே தேடி வந்து சேர்ந்தது?
>
> வேட்டு முறையை நம்பிப் பதவி வேட்டையில் இறங்கியிருக்கும் காமராசரிடம் இனி எப்படி ஆட்சி வந்து சேரும்?

**அத்தேர் தேர்தல்வரை பொறுத்திராமல், முன்கூட்டியே ஆட்சியை மாற்றவேண்டும் என்று கூறுவதே வேட்டு முறைதான்! ஓட்டு முறையை நம்புபவர்கள் இப்படிச் சொல்லமாட்டார்கள்!**

சனநாயக ரீதியில் அமைந்த அரசை எப்படி மாற்றமுடியும்? **தம் உயிரைக் கொடுத்தாவது ஆட்சியை மாற்றப்போவதாகக் கூறும் காமராசர், தாம் ஆட்சி செலுத்தியபோது எத்தனை உயிர் களைப் பலி கொண்டிருக்கிறார்? அப்போதெல்லாம் ஆட்சி மாறி விட்டதா?**

தமிழ்நாடு பெயர் கோரியும், காங்கிரசு ஆட்சியில் மலர்ந்திருந்த இலஞ்ச ஊழலை ஒழிக்கக் கோரியும் அறுபது நாட்களுக்குமேல் உண்ணுநோன்பிருந்து சங்கரலிங்ஞர் உயிர்விட்டாரே -- அப் போது காமராசரின் கல்மனம் கரைந்ததா?

சங்கரலிங்ஞர் மறைவுபற்றி அவரிடம் கேட்டதற்கு, 'பட்டினி கிடந்தார் -- செத்தார்; இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது' என்ற திமிருடன் பதில் சொன்னவர்தானே காமராசர்!

காமராசரும் -- பக்தவத்சலமும் தமிழ்நாட்டு ஆட்சிபீ த்தில் அமர்ந்துகொண்டு நடத்திய அக்கிரமங்களில் ஆயிரத்தில் ஒன்று -- இரட்சத்தில் ஒன்றுவது இப்போது நடப்பதாக நிரூபித்துக் காட்டமுடியுமா? அப்படிப்பட்ட கொடியவர்கள் ஆண்டபோது கூட, 'போராட்டம் நடத்தி ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும்' என்று பேரறிஞர் அண்ணு அவர்களோ -- பொறுப்புள்ள பிற அர சியல் சட்சித் தலைவர்களோ கூறவில்லையே!

பொறுமையைத் தேர்தலில் போட்டியிட்டுப் போட்டியிட்டுத்தானே ஆட்சியை மாற்றவேண்டியிருந்தது? இந்த சனநாயக 'பால பாடத்தைக்கூட மதிக்க மறுக்கும் காமராசரை நம்பியா தமிழ் நாட்டு மக்கள் -- அவரிடம் மீண்டும் ஆட்சியில் ஒப்படைத்து விடுவார்கள்?

காமராசர் வேண்டுமானுல், தமது எதிர்கால வேலைத் திட்டத்தைச் செயல்படுத்தட்டும்; அதாவது, தி. மு. க. அரசை மாற்றப் போராட்டம் நடத்தட்டும்; ஆனுல் அவர் எதிர்பார்ப்பதைப்போல -- அவர் பின்னுல் தமிழ்நாட்டு மக்களும் வரம்போவதில்லை -- வன் செயல்களால் ஆட்சியும் கவிழ்ந்துவிடப்போவதில்லை!

காமராசருக்குச் சீலை வைத்த இந்த ஆட்சி, அவருடைய உயிரைப் பழிக்கக்கூடிய அளவுக்கு இல்லை; அவரது உயிருக்குப் பாது காப்பாத்தான் என்றும் இருக்கும்; அவர் என்ன பேசினுலும் -- ஏசினுலும் அவருக்கு உரிய பாதுகாப்பும் -- மரியாதையும் அளிக்க இந்த அரசு என்றும் தயங்கியதில்லை!

உயிர்த் தியாகத்தைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுவிட்ட தாகப் பேசி, வீண் -- மக்களை வன்முறைக்குத் தூண்டுவோரா னுல், அதில் நிச்சயம் அவர் தோல்வியான அடைவார்!

இப்படிப்பட்ட பேச்சுகளெல்லாம் தமிழ்நாட்டுக்குப் புதியவை மல்ல என்பதைக் காமராசர் உணர்ந்துகொள்ள வேண்டும்!

காம -- பேத -- தான -- தண்டவும் என்ற நால்வகைப் போராட்ட முறைகளில் மூன்று முறைகளைக் கையாண்டு பார்த்து -- இப்போது நான்காவது முறையைக் கையாளப் பார்க்கிறார் காமராசர் -- அதாவது, கையில் தடியெடுக்கச் சொல் கிறார்!

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் ஆன காலம் மலையேறி விட்டது! இது சனநாயக யுகம்! காமராசர் நிலைமை உணர்ந்து -- காலமறிந்து -- தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்!

மா. சே.

## நக்சல்பாரிகள் நடத்திய கொலைகள்

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் தந்த விவரம்

புதுடில்லி, ஆக. 4— ஒவ்வொரு மாநிலத்திலும், 'தீவிர கம்யூனிஸ்டுகள்' எனக் கூறப்படும் நக்சல்பாரிகள் செய்த கொலை பற்றிய விவரங்களை நாடாளுமன்ற மேலவையில் உள்துறை துணை யமைச்சர் கே. சி. பந்த் வெளியிட்டார்.

ஒரு பிரகாஷ் தியாகி என்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்த தாவது:—

"மேற்கு வங்காளத்தில் இந்த ஆண்டு சனவரி முதல் மே முடிய 5 மாதங்களில் 956 பேர்களைக் கொலை செய்திருக்கின்றனர்.

மற்ற மாநிலங்களில் அவர்கள் நடத்திய கொலைகளின எண்ணிக் கை வருமாறு:—

| | |
|---|---|
| அசாம் | 12 |
| ஆந்திரம் | 95 |
| பீஹார் | 96 |
| இமாசலப் பிரதேசம் | 1 |
| அரியானு | 2 |
| கேரளம் | 10 |
| ஒரிசா | 8 |
| பஞ்சாப் | 70 |
| இராஜஸ்தான் | 1 |
| தமிழ்நாடு | 5 |
| உத்தரப் பிரதேசம் | 2 |
| திரிபுரா | 7 |
| சண்டிகர் | 1 |

இந்தக் கொலைகள் தொடர்பாக கேரளத்தில் 164 பேர்களும், ஆந் திரத்தில் 3,836 பேர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆந்திரத்தில் தீவிர கம்யூனிஸ்டு களிடமிருந்து வெவ்வேறு விதமான 650 ஆயுதங்களும் -- ஏராளமான வெடி மருந்துகளும் -- நாட்டு வெடி குண்டு செய்வதற்குத் தேவை யான பொருள்களும் கைப்பற்றப் பட்டிருக்கின்றன; மற்ற மாநிலங் கள் பற்றிய விவரங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன."

## வரதட்சணையை ஒழிக்க வழி

### ஆளுநர் ஷா யோசனை

சிவகங்கை, ஆக. 4— நாட்டில் இன்னமும் வரதட் சணை முறை நீடிக்குவதைத் தமிழக ஆளுநர் கே. கே. ஷா கண்டித்தார்; இந்தக் கொடுமையை ஒழிக்க கூடுக் கல்வி முறை மிகவும் உதவும் என்ற தமது யோசனையையும் தெரிவித்தார்.

"ஆணும் -- பெண்ணும் ஒன் முக்க கல்வி கற்க அனுமதித் தால் அவர்களிடையே காதல் மலரும்; வரதட்சணை முறையை ஒழிக்க இது ஒரு சிறந்த முறையாகும்" என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

நாட்டரசன் கோட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்துவைத்து ஆளுநர் பேசினுர்.

"மாணவர்களின் பெற்ருர்கள், எதிர்கால நலனுக்கு வரதட்சணை பாகப் பேசுந்தோறும் சிலைக்காமற்போனுலோ, தமிழகத்தில் முக்கியத் திருத்தம் ஒன்றை அரசு ஏற்றுக் கொண்டது.

மசோதாவில், சட்ட விரோத மான வேலை நிறுத்தக் காலத்தைக் ணக்கிட்டுக்கூடாது என்று இருக் தது; இதை எல்லாத் தரப்பு உறுப்பினரும் எதிர்த்தனர்.

அதன் பிறகு, 'சட்டவிரோத வேலைநிறுத்தக் காலத்தையும் தொடர் சர்வீசாகக் கணக்கிட வேண்டும்' என்ற திருத்தம் சேர்க் கப்பட்டது.

## நிலப்பறி இயக்கம் ஆந்திர முதல்வர் எச்சரிக்கை

ஐதராபாத், ஆக. 5— "சட்ட விரோதமாக நிலப்பறி இயக்கத்தில் ஈடுபட சிலர் முயற் சிக்கிறார்கள்; கட்சி ரீதியோ அல்லது தனிப்பட்ட சில குழுவின ரோ நிலைமையைப் பயன்படுத்தி சட்டம் -- ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்க முயற்சித்தால் அர சாங்கம் அதைப் பொறுத்துக் கொள்ளாது; அதில் ஈடுபடு பவர்களே அதற்குப் பொறுப் பேற்க வேண்டிவரும்"

என்று ஆந்திர மாநில முதல்வர் பி. வி. நரசிம்ம ராவ், சட்டமன்றத் தில் நிலச் சீர்திருத்த மசோதாமீது நடந்த விவாதத்திற்கும் பதிலளித்துப் பேசுகையில் எச்சரிக்கை செய்தார்.

"நிலச் சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது; அதற்குமுன், சட்டவிரோதமாக நிலப்பறி இயக்கத்தில் ஈடுபட்ட சிலர் முயற்சிக்கிறார்கள்" என்ருர் அவர்.


தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டு
பிள்ளைகளுக்குப்
பிறந்த நாள் பரிசு

ரூ. ஒரு லட்சம்
பரிசு பெறலாம்

மொத்தப் பரிசுத் தொகை
ரூ.7,00,000*
முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)
குலுக்கல் நாள்: 31-8-1972
பரிசுச் சீட்டு ஒன்றின்
விலை ரூ. 1/- தான்
சேவகு ஒரு ரூபாய்
கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
விளம்பர வெளிவிடு இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9
*2 வரிசைகள் வெளியிடப்படாது
வாழ்வே மாற்றம்


## தொழிலாளர் கிராசூட்டி மசோதா

### எதிர்க் கட்சித் திருத்தத்துடன் மக்களவையில் நிறைவேற்றம்

புதுடில்லி, ஆக. 4— தொழிலாளருக்கான கிராசுட்டி மசோதா நேற்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

இம்மசோதாவிற்கு, எதிர்க் கட்சி யினர் கொண்டுவந்த முக்கியத் திருத்தம் ஒன்றை அரசு ஏற்றுக் கொண்டது.

மசோதாவில், சட்ட விரோத மான வேலை நிறுத்தக் காலத்தைக் ணக்கிட்டுக்கூடாது என்று இருக் தது; இதை எல்லாத் தரப்பு உறுப்பினரும் எதிர்த்தனர்.

அதன் பிறகு, 'சட்டவிரோத வேலைநிறுத்தக் காலத்தையும் தொடர் சர்வீசாகக் கணக்கிட வேண்டும்' என்ற திருத்தம் சேர்க் கப்பட்டது.

## வேலை தேடித் தரும் நிலையங்களில் இலஞ்சம்

### புதுடில்லி நிர்வாகத்தில் நிலவும் ஊழல்

### விசாரணை நடப்பதாக நாடாளுமன்றத்தில் தகவல்

புதுடில்லி, ஆக. 5— "புதுடில்லியில் உள்ள வேலைத் தேடித் தரும் அரசு அலுவல கங்களில் இலஞ்சம் தாண்டவ மாடுவதாக வந்துள்ள புகார் கள்பற்றி விசாரணை நடை பெற்றுவருகிறது"

என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கடில்கர் தெரிவித் தார்.

"படித்தும் பட்டம்பெற்று வேலை யில்லாமலிருப்போரின் தன்பங் களைப் போக்கத் தனி வேலைத் திட்டங்களுக்காக ரூ. 36,55,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது; டில்லி நிர்வாகம் இதற்காகத் தக்க திட் டங்களைத் தீட்டிவருகிறது" என் றும் கடில்கர் கூறினர்.

"1971-ஆம் ஆண்டு இறுதியில் டில்லியில் 76,582 படித்தவர்கள் வேலையில்லாமல் இருந்தனர்; அவர்களில் 5,000 பேருக்குப் புதிதாக வேலைத் தேடித் தரப் பட்டது"

என்று தொழிலாளர் நலத் துறைத் துணையமைச்சர் பால கோவிந்த வர்மா தெரிவித்தார்.

## ஐந்து கோடிக்கு மேற்பட்டோர் வேலையின்றி அவதி

### ஒவ்வொருவரும் மாதம் ரூ. 20-க்குக் குறைவாகவே செலவழிக்கின்றனர்

### வீட்டில் வெள்ளி விழாக் கொண்டாடும் நேரத்தில் இந்தியாவின் வறிய நிலை

புதுடில்லி, ஆக 5— "இந்தியாவில் தற்போது வேலை யில்லாத் திண்டாட்ட நிலை வளர்ந்துகொண்டேயிருக் கிறது; வேலை தேடி அலு வலர்கள் எண்ணிக்கை 1966-ல் 260 இலட்சமாக இருந்தது; 1971-ல் அது 510 இலட்சமாக வளர்ந்துவிட்டது"

என்று, வேலைவாய்பு இணைப்பகங் களின் எண்ணிக்கை விவரங்களில் தெரியவருகிறது.

வேலைவாய்பு இணைப்பகங் களில் பதிவு செய்துகொண் டுள்ள தொழிலாளர்களுக் கல்விக் தகுதிகளுடன் கூடியவர்களின் எண்ணிக்கை யும் ஏறி வருகிறது; 1966-ல் மெட்ரிகுலேஷனுக்கு மேற் பட்ட கல்வித் தகுதியுடையோரின் எண்ணிக்கையும் 6.18 இலட் சத்திலிருந்து 12.97 இலட்ச மாக அதிகரித்திருக்கிறது.

வேலைக்காகப் பதிவு செய்து கொண்டுள்ள மெட்ரிகு லேஷன் தகுதியுடையோரின் எண்ணிக்கையும் 6.18 இலட் சத்திலிருந்து 12.97 இலட்ச மாக அதிகரித்திருக்கிறது.

நடைமுறையில் உள்ள வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை யும் அதிகரித்துள்ள போதி லும், அது, வேலை பெறத் தகுதி பெற்று வருவோரின் எண்ணிக்கைக்கு ஏற்ற விகி தத்தில் இல்லை.

வேலைவாய்ப்பு மற்றுக் குறையை, மக்களின் ஏழ்மை நிலையும் சுட்டிக்காட்டுகிறது.

நாட்டிலுள்ள மக்களில் 25 கோடியினரில் ஒவ்வொருவரும் தமக்கென்று மாதம் ரூ. 20-க்கும் குறைவாகவே செலவழித் துக் கொள்ளும் நிலையிலேதான் உள்ளனர்.

## கிராமத் தொழில் திட்டம்

### கூடுந்த சில ஆண்டுகளில் பெற்ற வளர்ச்சி

புதுடில்லி, ஆக. 4— திட்டக் குழுவின் ஆதரவில் தொடங்கப்பட்ட கிராமத் தொழில் திட்டம் கடந்த சில ஆண்டுகளில் தனது செல்முறைகளுக்கென ரூ. 13.75 கோடிக்கும் அதிகமாகச் செலவிட்டுள்ளது.

இவற்றில் வளர்ச்சித் திட்டங் களுக்கென ரூ 6.81 கோடியும், மூலதனம் போடுவதற்கென தொழில் பிரிவுகளுக்கு அளிக்கப் பட்ட கடன் தொகையாக ரூ. 94 கோடியும் ஒதுக்கப்பட்டன.

1970-ஆம் ஆண்டில் பணஉதவி பெறும் தொழில் பிரிவுளின் எண் ணிக்கை 28,641 ஆக இருந்த 30,171 ஆக -- ஆதாவது 5.4 சத விகிதம் -- உயர்ந்தது.

கடந்த ஆண்டில் தொழிற் பிரிவு கள் போடும் மொத்த மூலதனம் ரூ. 16.68 கோடியிலிருந்து ரூ. 18.58 கோடியாக அதிகரித்தது.

## சென்னையில் டெலிவிஷன்

### 1973-ம் ஆண்டு இறுதியில் செயல்பட்டத் துவங்கும்

சென்னையில் ரூ 18.76 இல சம் செலவில் டெலிவிஷன் நிலையம் ஒன்று அமைக்கப்படவிருக் கிறது; இந்நிலையத்திற்கான கட்டட வேலைகளை, அரசின் பொதுப்பணித் துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது: கட்டட வேலைகளுக்கு ரூ 37 இலட்சம் செலவாகும்.

10 கி. வாட் மின்சக்தியைக்கொண்ட டிரான்ஸ்மிட்டர் மூலம் இந்த டெலிவிஷன் நிலையம் ஒளிபரப்பு விருக்கும். நிகழ்ச்சிகளை 20,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவி லுள்ள 61 இலட்சம் மக்கள் காணலாம்.

இந்நிலையம் 1973-ஆம் ஆண்டு இறுதியில் செயல்படத் துவங் கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இத்தகவலை, மத்திய தகவல் -- ஒலிபரப்பு இணை அமைச்சர் ஐ.கே. குஜ்ரால், மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரி வித்தார்.

## தூத்துக்குடியில் கனநீர்த் தொழிற்சாலை

### ரூ. 21.32 கோடி செலவில் அமையும்

புதுடில்லி, ஆக. 4— "தூயசக்திக் கமிஷன், தமிழ் நாட்டில் தூத்துக்குடியிலும், குஜராத்தில் பரோடாவிலும் இரண்டு தொழிற்சாலைகளில் கோட்பாடில் தண்ணீரில் கனநீர் தயாரிக்கும் திட்டங்களை அமைத்துவருகிறது"

என்று, நிலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில் தெரிவித் தார்.

தூத்துக்குடியில் அமைக்கப்பட விருக்கும் கனநீர்த் தொழிற்சாலை யான கட்டுமான வேலைகள் 1974-75-ஆம் ஆண்டில் முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இத்தொழிற்சாலை அமைப்ப தற்கு ரூ 21.32 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## கூட்டுறவுத் துறையில் புதிய பதவி

### மாவட்டங்கள்தோறும் ஏற்படுத்த முடிவு

சென்னை, ஆக. 1— கூட்டுறவுத் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் மணிக்கள் செம்மையாகக் கண்காணிக்கவும் -- ஒருங்கிணைத்துச் செயல்படுத்த வும்; மாவட்டங்கள் மட்டத்தில், 'திட்டச் செயல்பாட்டு அதிகாரி கள்' என்ற கூட்டுறவுத் பதவிக்கே உருவாக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

'மாவட்டப் பதிவாளர்கள்' என்று அழைக்கப்படும் இவர்கள், கூட்டுறவுத் துறைமூலம் நிறை வேற்றப்படும் ஒருங்கிணைத்துமேற் பார்வையிடும் திட்ட அதிகாரியாக இருப்பார்.

தலைமைச் செயலாளர் திரு. சற்றுக் கூடுதலாகவும், இணை (ஜாயிண்ட்) பதிவாளர் பதவி தகுதிக்குச் சற்றுக் குறைவாகவும் இந்த அதிகாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கப்படுவார் கள்.

## காவலில் உள்ள போர்க் குற்றவாளிகள்

### வங்க தேசத்துக்கு அனுப்பப்படுவரா?

புதுடில்லி, ஆக. 4— "வங்க தேசத்தில் கைது செய் யப்பட்ட பாகிஸ்தான் இராணு வக் கைதிகள் மீது போர்க்குற்ற வாளிகளுக்கான வழக்கு நடத்து வதற்காக அவர்களைத் தங்க ளிடம் ஒப்படைக்குமாறு கேட்டு வங்க தேச அரசிடமிருந்து இது வரை இந்திய அரசுக்கு எவ் வித கடிதமும் வரவில்லை"

என்ற வெளி விவகாரத் துறைத் தலைமைச்செயலர் சுரேந்திர பால் சிங், மக்களவையில் கேள்வி ஒன் றுக்கும் பதிலளிக்கையில் தெரிவித் தார்.

"கியாஜியை வங்க தேச அர சிடம் ஒப்படைப்பதற்கான ஏற் பாடுகள் முடிவடைந்துவிட் டனவா? ஜெனரல் நியாஜி மீதும் ஒப்படைக்கப்படுவாரா?"

என்று, திருமதி சாவித்ரி சயாம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கை யிலேயே அமைச்சர் இவ்வாறு பதி லளித்தார்.

# நிழலோடு சண்டை போடும் 'சூரப் புலி'கள்

## இல்லாத 'தமிழர் படை' பற்றி ஏன் இந்தக் கிலி?

### செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

மதுரை ஆக. 5—

**"தமிழர் படையைத் தடைசெய்ய வேண்டுமென்று சொல்கின்றவர்கள், 'திமுகோடு சண்டை போட்டுக் கொண்டுக்கிறார்கள்' என்ற பொருள்!**

**"தமிழ்நாட்டில் 'தமிழர் படை' என்ற அமைப்பே இல்லை; அப்படி இருப்பதாகவும்--அது வன்முறையில் ஈடுபடுவதாகவும் யார் பீரச்சாரம் செய்கிறார்களோ அவர்கள்தான் கடந்த நான்கைந்து மாதங்களில் தி. மு. கழகத் தலைவர்களைக் கொலை செய்திருக்கின்றனர்; ஒருவர் நெல்லை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் சண்முக சுந்தரனார்; இரண்டாமவர்--தொழிலாளர் நலவர் பிரதாப் சந்திரன்; மூன்றாமவர்--நிலக்கோட்டை முத்து; இப்படித் தி. மு. கழகத்தவரைக் கொலை செய்தவர்களைத்தான், தமிழர் படை என்ற ஒன்றிற்குப் பதாகவும், அது பலாத்காரத்தில் ஈடுபடுவதாகவும் அவதூறு கூறியிருக்கிறார்கள்.**

**! தமிழர் படை என்பது 1968-ல் மதுரை நிர்மலா மேல் கழகக் கூட்டணிகளையும் -- ஊர்வலங்களையும் ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கப்பட்டது; அந்தப் படையும் தற்போது மதுரை நகரத்தில் இல்லை"**

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று இங்கு செய்தியாளர்கள் வினவிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சுட்டிக் காட்டி விளக்கினார்.

கேள்வி :—"தமிழர் படை இப்போது இல்லை என்கிறீர்களே--அது கலைக்கப்பட்டுவிட்டதா ?"

பதில் :—"நீங்கள், 'படை' என்பதை, 'ஆர்மி' என்ற பொருளில் நினைத்துக் கேட்கிறீர்கள்; அந்தப் பயங்கரமான பொருள் கொண்ட படையன்று அது; 'தொண்டர் படை' (வாலண்டியர் கார்ப்ஸ்) என்ற பொருள் தான் பொருத்தமானது; எதிரிகள் சிலரால் விஷமப் பிரச்சாரம் செய்ததனால், அந்தப் படையே இப்போது இல்லை."

## கன்றுகவ்தான் துள்ளுகின்றன

கேள்வி :—"திருச்செங்கோட்டில் பேசும்போது, 'கழக அரசு கவிழ்ந்தாலும் கழகம் சவிழாது' என்று கூறியிருக்கிறீர்களே--அப்படிப்பட்ட அச்சம் உங்களுக்கு உண்டா ?"

பதில் :—"எப்படி அச்சம் இருக்கும் ?"

கேள்வி :—"தமலரை அமைச்சருக்கு இந்த எண்ணம் எப்போதாவது இல்லை; அரசுக்கு அடுத்தத் தட்டில் உள்ளவர்களுக்குத்தான் இந்த எண்ணம் ஏற்பட்டிருக்கிறது; இ. காங்கிரசின் தோல்சினத்தை வைத்து நான் இதற்கு உவமை கூறமுடியும்; அவர்களது சின்னம் -- பசுவும் கன்றும்; பசு சாதுவாகத்தான் உளளது--கன்றுகள்தான் துள்ளுகின்றன !"

## உடன்பாட்டுக்கு மாறுப் பேசுவதா ?

கேள்வி :—விவசாயிகள் பிரசினை பற்றி இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் மறியல் செய்வதாச் செய்தி வந்துள்ளதே ?"

பதில் :—"அது பற்றிய விவரம் என்னிடமில்லை."

கேள்வி :—அண்மையில் நடந்த தம்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணே வேண்டும் என்று இங்திரா காங்கிரசார் கேட்கிறார்களே !"

பதில் :—"விவசாயச் சங்கத்தினரும் -- அரசினரும் பேச்சு வார்த்தை நடத்தியபோது அந்தக் கட்சியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்; ஆனால், அக்கட்சியிலுள்ள வேறு சிலர் உடன்பாட்டுக்கு மாறுகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்."

## சில ஒப்பந்தம்--தி. மு. கழக நிலை

கேள்வி:— "சிம்லா ஒப்பந்தம் பற்றி மத்திய அரசின் கொள்கை சரியா ?"

பதில் :—"அதுபற்றி தி. மு. கழகச் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் பேசியிருக்கிறார்கள்; சிம்லா ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் பொதுவாக அதை வரவேற்றிருக்கிறோம்; 'நாடாளுமன்றம் கூடி விவாதிப்பதற்கு முன்பாக அவசரப்பட்டு அங்கீகாரம் செய்திருக்க வேண்டியதில்லை' என்று எதிர்க் கட்சியினர் கூறும் கருத்தையும் நான் மறுப்பவனல்லன்."

## மறுபரிசீலனை செய்வது தவறில்லை என்பதே தி. மு. க. கொள்கை

கேள்வி :—"மனோகரனிடம் இது பற்றி விளக்கம் கேட்டிருக்கிறீர்களே -- அவரும் பதில் சொல்லியிருக்கிறரே--அந்தப் பதில் உங்களுக்குத் திருப்திதானே ?"

பதில் :—"எந்த ஒரு முடிவையும் நாட்டின் பொது நலனைக்காக மறுபரிசீலனை செய்வது தவறில்லை என்பதது தி. மு. கழகத்தின் கொள்கை; அதையொட்டியே நாஞ்சில் கி. மனோகரன் எடுத்த முடிவு பற்றியும் பரிசீலிக்கப்பட்டது; அதற்கு நாஞ்சில் மனோகரன் அவர்களும் ஒத்துழைத்திருக்கிறார்."

## யாரும் தாழ்த்த வேண்டும் என்ற எண்ணமில்லை

கேள்வி :—" 1957 முதல் தி. மு. கழகம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றிருக்கிறது; என்ற போதிலும், கடந்த 15 ஆண்டுகளாக இரண்டு அவைகளுக்கும் பொதுவான கட்சித் தலைவர் என்றிருந்து; ஒப்போது ஏற்படுத்தியிருக்கிறீர்களே --ஏன் ?"

பதில் :—" 1957-ல், மக்களவையில் இரண்டே பேர் மட்டும் இருந்தோம்; இப்போது மக்களவையில் 23 பேரும், மாநிலங்களவையில் 12 பேரும் இருக்கிறோம்; அதையொட்டி இந்த ஏற்பாடு; இந்த ஏற்பாட்டால் யாரும் தாழ்த்த வேண்டும் என்ற நோக்கமுமில்லை; இரு அவைகளின் கூட்டுத் தலைவராக இரா. செழியன் இருந்தாலும், மக்களவையில் நாஞ்சில் கி. மனோகரனும், மாநிங்களவையில் திலீப் வில்லாளனுமே 'கட்சித் தலைவர்கள்' என்ற உரிமையை அனுபவிப்பார்கள்."

## திருமனை நாயகர் மகால்

கேள்வி :—திருமலை நாயக்கர் மாளிகைப் பார்வையிடப் போகிறீர்களே -- அதன் முக்கியத்துவம் என்ன ?"

பதில் :—"சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற முறையில் அந்த இடத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று பார்க்கப் போகிறேன்."

## சொன்னது அழியவில்லை

திருச்சி செய்தியாளர் :—"எங்கள் பழைய மாவட்டச் செயலாளர் அமைச்சராவார ?"

பதில் :—"மதுரையில் வந்து, 'எங்கள் மாவட்டச் செயலாளர்' என்று திருச்சி பற்றி கேட்பது சரியலை."

கேள்வி :—" திருச்சிக்கு வந்த போது, 'எந்த மாவட்டத்திற்கும் குறைவிருக்கின்ற வகையில் நடந்து கொள்ள மாட்டேன்' என்று சொன்னீர்களே !"

பதில் :—" அப்போது நான் சொன்னது அழியவில்லை; அப்படியே இருக்கிறது; நான் திருச்சியில் சொனனது, 'எந்த மாவட்டத்திற்கும் எனக்குறை ஏறபடுகிற மாதிரி நடந்துகொள்ள மாட்டேன்' என்பதுதான்."

## கிராம நீதிமன்றம்

கேள்வி :—"கிராம நீதிமன்றம் பற்றிய மசோதா தயாராகிவிட்டதா ? இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அது வருமா ?"

பதில் :—"நிறைய மசோதாக்கள் இந்தத் தொடரில் வருகின்றன; இது வருமா என்று சரியாகச் சொல்ல முடியாது."

## 'ஆகிவிடக் கூடாது' என்று கூறுகிறார்

கேள்வி:—"கல்வித் துறை, 'மத்தவத்தலம் ஆட்சியிலிருந்தபோல் ஆகக்கூடாது' என்று பெரியார் கூறியதனாரே--தங்கள் கருத்து என்ன ?"

பதில் :—" ஆகிவிட்டது என்று அவர் கூறவில்லை; 'ஆகிவிடக் கூடாது' என்றுதான் கூறுகிறார்; அப்படி ஆகாது !"

## தவறுன செய்தி

### குடும்பநலத் துறைத் தணை இயக்குநர் மறுப்பு

சென்னை, ஆக. 5—

"கடலூரில் கடந்த ஜூலை 30-ஆம் நான் நடந்த மகளுர தொகை இயல் எல்வி பற்றிய கருத்தரங்கில் நான் கலந்துகொண்டு பேசியபோது, பள்ளிகளில் மாணவர்வுக் கல்வி கற்பிப்பது பற்றிய குறிப்பு அரசின ஆய்வில் இருந்துவருவதாகக் குறிப்பிட்டதாகச் சில நாளிதழ்களில் வெளியான செய்தி சரியானதல்ல என்பதையும், அத்தகைய கருத்தை நான் வெளியிடவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று, குடும்பநலத் துறைத் துணை இயக்குநர் திரு. பூ. கணேசன் அறிவிக்கிறார்.




## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்
### 6--8--72

சேலம்

27.வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு கிச்சிப் பாளையம் மப்பேறு விடுதி அருகில்; தலைவர் : ஆ. நடராசன்; வேகவோர் : சி. பி சுனகசபை, ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி. கே. ஜெயராமன் எம்.எல்.ஏ., ஏ. மாரியப்பன் எம்.சி., ஆ. சின்னையன், பி. எஸ். மாணிக்கம் எம்.சி., கே. துரைசாமி எம்.சி., பெ. ஈராசமாணிக்கம், கே. பி சு மி சி, தண்டபாணி, சி. சுப்பிரமணியம், ஏ. எஸ். வி. துல்கந்தர் மற்றும் பலர்.

### 7--8 72

மேட்டூர் அணை

நகர தி.மு.க. சார்பில் புரட்சி நடிகர் எம்.ஜி ஆர். அவர்களுக்குப் பாராட்டு ; மாலை 4 மணிக்கு எம். ஆர். சி. மைதானத்தில்; தலைவர் : அமைச்சர் கே. ஈராசராம் ; வாழ்த்துரை வழங்குவோர்: செ. கங்தப்பன் எம்.எல்.ஏ., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., எச்.எல். முருகேசன், எஸ் ஆறுமுகம், கே. செயராமன் எம்.எல்.ஏ, அ. ஆறுமுகம் எம்.எல்.ஏ., மு. பரமசிவம் எம்.எல்.ஏ, கனகுமலை எம்.எல்.ஏ., அ. பாலு, வீ. எனனியப்பன், ஏ. இராமலிங்கம், க. கு. சின்னசாமி (எம்.ஜி ஆர். அவர்களுக்கு தங்கத்தால் ஆன வேடுர் அணை உருவமைப்பு வழங்கப்படும்.)

## சேலம் பொருட்காட்சி

### எம்.ஜி.ஆர். திறந்துவைக்கிறார்

சேலம் 32-வது அகில இந்திய தொழில் பொருட்காட்சியை 7—8—72 காலை 10 மணிக்கு புரட்சி நடிகர் எம்.ஜி ஆர். திறந்து வைப்பார்; இத்திறப்பு விழாவுக்கு அமைச்சர் க.இராசாராம் தலைமை வகிப்பார்.

அன்று மாலை 6-30 மணிக்குப் பொருட்காட்சிக் கலையரங்கத்தை திரு. செ. கந்தப்பன் எம்.எல்.ஏ தலைமையில் நடிகர் ஜெயசங்கர் திறந்தவைப்பார்; நடிகைகள் பாரதி, வித்தியா ஆகியோரும் விழாவில் பங்குகொள்வர்.

## நீதி விசாரணை ரத்து -- தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஆக. 5—

"விவசாயிகள் நடவடிக்கைக் குழுவுக்கு -- மாநில அரசுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து, ஜூலை 5-ந் தேதி யன்று விவசாயிகள் சங்கத்தலைவர்களோடு திருநெல்வேலி -- சேலம் -- இராமநாதபுரம் -- கோவை மாவட்டங்களில் நடந்தப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றிய நீதி விசாரணே ரத்து செய்யப்படுகிறது"

என்று அரசு அறிவித்திருப்பதாகப் பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

நிராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அண்ணாநகரகவும் கொண்டு, எழுதி அரசகதேவி (56) குன்றைரா மலை சேர்ந்த தேனு நெல்லை) ல. 1972 இல்லிஸ்ராஜ்ரத்து.

## திருமலை நாயக்கர் மகாலில் முதலமைச்சர்

### சிரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டார்

மதுரை, ஆக. 5—

நேற்று காலை முதலமைச்சர் கலைஞர், அமைச்சர் ப.உ. சண்முகம், மதுரை மேயர் எஸ் முத்து, எஸ்.எஸ். தென்னரசு எம் எல்.சி., முரசொலி மாறன் எம்.பி. ஆகியோர் மதுரை திருமலை நாயக்கர் மகாலைப் பார்வையிட்டனர்.

பழுதுபட்ட இடங்களைச் சீரமைக்கும் பணிகளைப் பார்வையிட்ட முதலமைச்சர், அது பற்றிய பணி குறித்தும் பாராட்டுத் தெரிவித்தார்.

## அதிக மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள்

### செலாவணியிலிருந்து அகற்றப்படுமா ?

புதுடில்லி ஆக. 5—

"நூறு ரூபாய் மற்றும் அதற்கு மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவிக்கப் படமாட்டாது; இப்பற்றி அரசு பரிசீலன செய்யவும் இல்லை" என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நிதித்துறை தனையமைச்சர் சுசீலா ரோதகி கூறினர்.

"பெரிய நோட்டுகளச் செலாவணியிலிருந்து அகற்றுவதன் மூலம், கள்ளப் பணத்தை வெளியில் கொண்டுவரும் பிரச்சினை தீராது" என்றும் அவர் கூறினர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'தாங்கத் தண்டனை பெற்ற கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறிப்பிட்ட ஓளவுக்குக் குறைக்கலாம்' எனக் கூறப்பட்டிருக்கிறது; ஒரு மாதம் தண்டனை பெற்றவர்கட்கு -- அனுபவித்த தண்டனைக் காலம் போக மீதமுள்ள காலத்தைத் தள்ளுபடி செய்து விடுதல் செய்யலாம்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், 'ஒரு மாதம் தண்டனை பெற்ற கைதிகள்' என்பதற்குப் பதிலாக, '3 மாதத் தண்டனை பெற்ற கைதிகள்' இதுவரை அனுபவித்துள்ள தண்டனைக் காலம் போக மீதமுள்ள காலத்தைத் தள்ளுபடி செய்து விடுதல் செய்யலாம்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், 'ஒரு மாதம் தண்டனை பெற்ற கைதிகள்' என்பதற்குப் பதிலாக, '3 மாதத் தண்டனை பெற்ற கைதிகள் இதுவரை அனுபவித்துள்ள தண்டனைக் காலம் போக மீதமுள்ள தண்டனைக் காலத்தைத் தள்ளுபடி செய்து--ஆஞ்சு 15 அன்று விடுதல் செய்யலாம்' என எண்ணியிருக்கிறது.

"உதாரணமாக 3 மாதம் தண்டனை பெற்ற ஒருவர், 'இன்று முதல் தண்டனையை அனுபவிக்க வேண்டும்' என்றால், ஆகஸ்டு 15-ந் தேதிவரை 10 நாட்கள் தண்டனை அனுபவித்த காலம் போக மீதமுள்ளதை ரத்து செய்து, விடுதல் செய்யப்படுவார்."

கேள்வி :— "விடுதலை செய்யப்படும் கைதிகள் எத்தனை பேர் ?"

பதில் :—"ஏறத்தாழ 1,500 பேர் இருக்கும்."

கேள்வி :—'மற்ற கைதிகட்குத் தண்டனைக் காலம் குறையுமா ?"

பதில் :—"குறையும்; அதன்படியும் சிலர் விடுதலை செய்யப்பட்டாலும்."

கேள்வி :—"தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படுமா ?"

பதில் :—"அது, அகில இந்திய ரீதியில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்."